අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026

General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

| | |
|---|---|
| **வினாப்பத்திரம்**<br>ප්‍රශ්න පත්‍රය<br>**Question Paper** | **தமிழ் மொழி மூலம்**<br>දෙමළ මාධ්‍යය<br>**Tamil Medium** |

# புவியியல்
# භූගෝල විද්‍යාව
# Geography



**வினாப்பத்திரம்** I/II - ප්‍රශ්න පත්‍රය I/II - **Question Paper** I/II

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

புவியியல் I

22 T I

மூன்று மணித்தியாலம்

மேலதிக வாசிப்பு நேரம் -10 நிமிடங்கள்

**மேலதிக வாசிப்பு நேரத்தினை வினாப்பத்திரத்தினை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும், விடைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்க.**

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாக்கள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதோடு அவற்றுக்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்படவேண்டும்
- **பகுதி I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.
- **பகுதி II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- **பகுதி III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து

## பகுதி I

**01.** பூகோள இடநிலைப்படுத்தல் அமைப்புடன் தொடர்புடைய அசென்சன் தீவுகள் அமைந்துள்ள சமுத்திரம்.
(1) ஆட்டிக் சமுத்திரம் (3) இந்து சமுத்திரம் (5) அந்தாட்டிக் சமுத்திரம்
(2) பசுபிக் சமுத்திரம் (4) அத்திலாந்திக் சமுத்திரம் (……….)

**02.** வெக்டர் தரவு மாதிரி தொடர்பான சரியான கூற்றினை தெரிவு செய்க.
(1) அவதானிப்பு அலகுகளுக்கு எண் பெறுமதியை வழங்குகிறது.
(2) வரைபட பரப்பை நிரை மற்றும் நிரல் வடிவமாக மாற்றுகிறது.
(3) கணனி படங்கள் வெக்டர் வடிவத்தித்திலேயே உள்ளடக்கப்படுகின்றன.
(4) இது கைகளினால் தயாரிக்கப்படும் தரவு மாதிரி.
(5) தரவுகள் புள்ளிகள்,கோடுகள் மற்றும் பல்கோணிகள் மூலம் சேமிக்கப்படுகிறது. (……….)


**03.** ஒரு வரைபடத்தின் அளவுதிட்டத்தினை வகைக்குறிப்பின்ன முறையில் காட்டும் போது,
(1) சென்ரிமீற்றர்கள் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்
(2) உண்மையான நிலப்பரப்பின் அலகுகள் மற்றும் வரைபடத்தின் அலகுகள் இரண்டும் பயன்படுத்தப்பட வேண்டும்
(3) நிலப்பரப்பின் அலகுகள் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்
(4) கிலோமீற்றர்கள் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்
(5) வரைபடம் தயாரிக்கப்பட்ட அலகுகள் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். (……….)

**04.** ஆய்வு ஒன்றின் போது பயன்படுத்தப்படும் இரு பிரதான செயல்முறைகளானவை,
(1) நேர்காணல் முறை மற்றும் தொலைபேசி உரையாடல்கள்
(2) அவதானிப்பு முறை மற்றும் அளவீடுகள்
(3) நேரடி அவதானிப்பு முறை மற்றும் பங்கேற்பு அவதானிப்பு முறை
(4) வினாக்கொத்து முறை மற்றும் நேர்காணல் முறை.
(5) அவதானிப்பு முறை மற்றும் வினாக்கொத்து முறை (………..)

**05.** பின்வரும் மாறிகளை குறிப்பதற்கு மிகவும் பொருத்தமான வரைபட வகைகளை குறிக்கும் விடைதொகுதியை தெரிக.
A - பல வருட காலபகுதிக்கான யால மற்றும் மகா போகங்களுக்கான அறுவடை.
B - வருடாந்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதி
C – வருடாந்த மழைவீழ்ச்சி பரம்பல்.
(1) எளிய பார் வரைபடம், இரட்டைபார் வரைபடம், எளிய கோட்டு வரைபடம்.
(2) வட்ட வரைபடம், இரட்டை பார் வரைபடம், சம அளவுகோட்டு வரைபடம்.
(3) இரட்டை கோட்டு வரைபடம், வட்ட வரைபடம், விலகல் பார் வரைபடம்.

(3) வட்ட வரைபடம், இரட்டைபார் வரைபடம், விலகல் பார் வரைபடம்
(4) இரட்டை பார் வரைபடம், வட்ட வரைபடம், சம அளவுகோட்டு வரைபடம்
(5) எளிய கோட்டு வரைபடம்., விலகல் பார் வரைபடம், சிதறல் வரைபடம் (……….)

**06.** பின்வரும் சமவுயர கோட்டு வரைபடத்தினால் காட்டப்படுவது.




(1) குழிவு சாய்வு.
(2) குவிவு சாய்வு
(3) மென் சாய்வு
(4) சரிவு சாய்வு.
(5) சமச்சீர் சாய்வு (……….)

**07.** இடவிளக்க படமொன்றில் நீர்வடிகால் அம்சங்களை மாத்திரம் குறிக்கும் விடைத்தொகுதி.
(1) குளம், கிளையாறு
(2) நீர்பாசன கால்வாய், கைவிடப்பட்ட குளம்
(3) அணைக்கட்டு, துறை
(4) நீர்வீழ்ச்சி, நீர்பிரிமேடு
(5) நீர்நிலை, நதி (………..)

**08.** தரவு தொகுதியொன்றின் மேல் மற்றும் கீழ் பகுதிகளை பிரிக்கின்ற புள்ளியை குறிப்பது.
(1) இடையம்
(2) சராசரி
(3) சராசரி விலகல்
(4) ஆகாரம்
(5) இடை விலகல் (……..…..)

**09.** “வரைபடமொன்றினை பயன்படுத்தி ஒரு நீர்த்தேக்கத்தினை அமைப்பதற்கான பொருத்தமான இடத்தினை தெரிவு செய்தல்” இச்செயன்முறையானது, எந்த வரைபட பயன்பாட்டின் எந்த மட்டத்தைச் சார்ந்தது?
(1) வரைபட வாசிப்பு
(2) வரைபட பகுப்பாய்வு
(3) வரைபடமாக்கல்
(4) வரைபட விளக்கம்
(5) வரைபட வடிவமைப்பு

(……….)

**10.** குறித்தவொரு மாதத்தில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவான நாட்களின் எண்ணிக்கையை கணக்கிட பயன்படுத்தப்படுவது.
(1) திரள் மீடிறன் பரம்பல்
(2) இடை விலகல்
(3) நியம விலகல்
(4) திரட்டு மீடிறன் பரம்பல்
(5) இடைவிலகல் (……….)

11. அமிலதன்மை கொண்ட எரிமலைப் பாறைக்கான உதாரணம்
(1) தயோரைட்
(2) கப்புரோ
(3) அந்திசைட்
(4) கிரனைட்
(5) ஒப்சிடியன் (……….)

12. சூரிய சக்தி மற்றும் இயற்கை செயற்பாடுகளால் நடைபெறும் வட்ட செயன்முறை.
(1) காபன் வட்டம்
(2 ஒட்சிசன் வட்டம்
(3) நீரியல் வட்டம்
(4) நைதரசன வட்டம்
(5) பொசுபரசு வட்டம் (……….)

13. கிரிட், சாணோகைட், சுண்ணக்கல் ஆகிய பாறை வகைகள் இலங்கையில் அதிகளவில் காணப்படும் மூன்று பிரதேசங்களைக் காட்டும் சரியான விடைத் தொகுதி.
(1) முத்துராஜவெல,யாழ்ப்பாணம்,ஆண்டிகம
(2) அக்குருகடுவ,இரத்தினபுரி,யாழ்ப்பாணம்
(3) ஆண்டிகம,அப்புத்தளை,அக்குருகடுவ
(4) புளுத்தோட்டை, ஆண்டிகம,இரத்தினபுரி
(5) தம்போவை,புளுத்தோட்டை,அப்புத்தளை (……….)

14. புவித்தகட்டசைவு தொடர்பான சரியான கூற்றாக அமைவது.
(1) புவித்தகடுகள் மூடி மீது மெதுவாக அசைவடைகின்றன.
(2) புவித்தகடுகள் நிலையானவை,அவை அசைவடைவதில்லை.
(3) புவியோடு மீது சீராகப் பரவியுள்ளது.
(4) சூரிய வெப்ப மாற்றத்தின் விளைவாகவே புவிநடுக்கங்கள் ஏற்படுகின்றன.
(5) மடிப்பு மலைகள் உருவாக்கத்தில் மழைவீழ்ச்சி பங்களிக்கின்றது. (……….)

15. பாறை அடுக்குகளின் மேல்மடிப்பு மற்றும் கீழ் மடிப்புகளில் மக்மா படிவதன் மூலம் உருவாகும் நிலவுருவம்.

(1) லெக்கோலித்
(2) பொபோலித்
(3) பத்தோலித்
(4) பெக்கோலித்
(5) லெபோலித்

(……….)

16. கரையில் மோதிய அலை,கடலை நோக்கி திரும்பும் போது புதிதாக கடலிலிருந்து வரும் அலைகளுக்கு கீழாக செல்லும் செயற்பாடு.

(1) பின்னோக்கிய அலை
(2) முன்னோக்கிய அலை
(3) ஆக்கும் அலை
(4) நீரோட்டம்
(5) வற்றுப் பெருக்கு

(……….)

17. 2025 நவம்பரில் உருவான "சென்யார் (Senyar)" சூறாவளி தொடர்பான சரியான கூற்றைத் தெரிக.

(1) வங்காள விரிகுடாவில் உருவாகி இலங்கையை பாதித்தது.
(2) பசுபிக் பிராந்தித்தில் உருவான ஒரு பலமான சூறாவளியாகும்.
(3) வங்காள விரிகுடாவில் மாத்திரம் நிலைகொண்டது.
(4) தென் தாய்லாந்து, மலாயா தீபகற்பம், சுமாத்திரா பகுதிகளில் கடும் சேதத்தை ஏற்படுத்திய சூறாவளியாகும்
(5) அராபிய கடலில் உருவாகி இலங்கையை பாதித்த ஒரு சூறாவளியாகும். (……….)

18. இலங்கையின் உலர் வலய ஆற்றுப்பள்ளத்தாக்குகள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாக அமைவது..

(1) நதிகள் கடலை சென்றடைவதற்கு முன்னரே வற்றுதல்.
(2) நீரை சேமித்து வைப்பதற்கு போதுமான நீர்த்தேக்கங்கள் இல்லாமை.
(3) அதிகரித்த மழைவீழ்ச்சியினால் அடிக்கடி வெள்ளப்பெருக்கிற்குட்படுதல்.
(4) மழைவீழ்ச்சிக்கு இணையாக அனர்த்தங்கள் அதிகரித்தல்
(5) மழைவீழ்ச்சி குறைவடைதல் மற்றும் உலர்வலய காலநிலை நீடித்தல்.


(……….)

19. காலநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கிடையிலான குழுவின் (IPCC) இன் கணிப்பீட்டு அறிக்கையின்படி, 1906-2005 வரையிலான காலப்பகுதியில் அதிகரித்துள்ள உலக வெப்பநிலையின் அளவு.

(1) $0.5^0$ C
(2) $0.74^0$ C
(3) $1.0^0$ C
(4) $1.5^0$ C
(5) $2.1^0$ C

(……….)

20. பின்வரும் வரைபடத்தில் A,B,C என காட்டப்பட்டுள்ள உயிர்திணிவுகளை சரியாக காட்டும் விடைத்தொகுதி




(1) A- அயன மழைக்காடுகள், B- பாலைவனம், C- துந்திரா
(2) A- பாலைவனம், B- துந்திரா C- சவன்னா
(3) A- பாலைவனம், B- சவன்னா , C- அயன மழைக்காடுகள்
(4) A- அயன மழைக்காடுகள், B- சவன்னா ,C- மத்திய தரைக்கடல் காடுகள்
(5) A- புல்வெளி, B- பாலைவனம், C- துந்திரா

(……….)

21. இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபை எதன் கீழ் இயங்குகிறது.

(1) பாதுகாப்பு அமைச்சின் கீழ்
(2) மாகாண சபை அமைச்சின் கீழ்
(3) நில அளவை திணைக்களத்தின் கீழ்
(4) வளிமண்டல திணைக்களத்தின் கீழ்
(5) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் (……….)

22. இயற்கையை பாதுகாப்பதற்கான சர்வதேச சங்கத்தினால் தொகுக்கப்படும் செந்தரவு புத்தகத்தில் குறிபிடப்படுவது.

(1) காடழிப்பு தொடர்பாக.
(2) கடல் மட்டம் உயர்வடைவது தொடர்பாக.
(3) சர்வதேச நாணய மாற்றம் தொடரபாக.
(4) அழிவடைந்து வரும் நிலையிலுள்ள தாவர – விலங்குகள் தொடர்பாக.
(5) பூகோள வெப்பநிலை தொடர்பாக. (……….)

23. இலங்கையின் ஈரநிலம் சார்ந்த இரு சரணாலயங்கள்.

(1) புந்தல - மாதுறுஓயா
(2) குமண - புந்தல
(3) கொக்கல - குமண
(4) ஆனைவிழுந்தான் - குமண
(5) மாதுறுஓயா - ஹக்கல
(.........)

24. கடல் மட்டத்தில் வளிமண்டலத்தின் சாதாரண அமுக்கம் மில்லிபாரில்.

(1) 300mm
(2) 1013mm
(3) 1025mm
(4) 1040mm
(5) 1130mm
(.........)

25. உப அயன உயரமுக்க வலயங்களிலிருந்து மத்தியகோட்டு தாழமுக்க வலயத்தை நோக்கி வீசுகின்ற காற்றுக்கள்

(1) பருவகாற்றுகள்
(2) முனைவுகாற்றுகள்
(3) கடல் - தரை காற்றுகள்
(4) மேலைகாற்றுகள்
(5) வியாபார காற்றுகள்
(.........)

26. மொத்த பிறப்ப வீதம் கணக்கிடப்படுவது.

(1) ஒரு நாட்டின் மக்கள் தொகையில் புதிதாக பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை.
(2) நட்டாண்டு சனத்தொகைக்கேற்ப மொத்த பிறப்புக்களின் சதவீதம்.
(3) ஒரு பிரதேசத்தின் ஆயிரம் மக்களுக்கான இயற்கை அதிகரிப்பு.
(4) நட்டாண்டு சனத்தொகையில் ஒவ்வொரு ஆயிரம் பேருக்கும் உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை.
(5) நட்டாண்டு சனத்தொகையுடன் ஒப்பிடும் போது பிறப்புக்களின் எண்ணிக்கை. (.........)

27. “அமோபஸ்”(Amorphos) குடியிருப்புகள் எனப்படுவது,

(1) ஒரு குறிப்பிட்ட, திட்டவட்டமான வடிவத்தைக் கொண்ட குடியிருப்புகள்
(2) ஒரு குறிப்பிட்ட இடத்தினை மையமாகக் கொண்டு உருவான குடியிருப்புகள்
(3) எவ்வித தடைகளும் இன்றி பரவியுள்ள குடியிருப்புகள்.
(4) முறையாக திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட குடியிருப்புகள்.
(5) ஒழுங்கற்ற முறையில் உருவாக்கப்பட்ட குடியிருப்புகள். (.........)

28. கிராம - நகர குடியிருப்புகளின் இரு பண்புகளை சரியாக குறிப்பிடும் விடை.

(1) அதிகமான குடியிருப்பு பகுதிகள் மற்றும் அதிக நாளாந்த இயக்கம்.
(2) ஏராளமான விவசாய நிலங்கள் மற்றும் தொழிற்றுறை பகுதிகளின் விரிவாக்கம்
(3) குறைந்த நாளாந்த இயக்கம் மற்றும் உயர் சுய தொழில் வாய்ப்புகள்.
(4) அதிக ஒலி மாசு மற்றும் குற்றச்செயல்களின் அதிகரிப்பு.
(5) குறைந்த குடியிருப்பு பகுதிகள் மற்றும் சட்டவிரோதமான குடியிருப்புகளின் அதிகரிப்பு. (.........)

29. “இலங்கையின் நகராக்க மட்டம்” தொடர்பான மிகச் சரியான கூற்று.

(1) உலகின் மிகக் குறைந்த நகராக்க மட்டத்தினை கொண்ட நாடாகும்.
(2) நகராக்க மட்டம் மெதுவாக மாறுகின்றது.
(3) நகரங்களுக்கிடையிலான வேறுபாடுகள் படிப்படியாக குறைகின்றன.
(4) உண்மையான நகராக்க மட்டம் வெளிப்படுத்தப்படவில்லை.
(5) உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாக காணப்படுகின்றன. (.........)

30. உலகில் மரபணு தொழினுட்பம் (Gene Technology) தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டாக கருதப்படுவது.

(1) 1943
(2) 1962
(3) 1973
(4) 1985
(5) 1994
(.........)

31. இலங்கையின் தற்போது அதிக வெளிநாட்டு வருமானத்தை ஈட்டித்தரும் இரு துறைகள்

(1) சுற்றுலாத் துறை மற்றும் சுயதொழில்
(2) சுற்றுலாத் துறை மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடு.
(3) வெளிநாட்டு முதலீடு மற்றும் வாகன ஏற்றமதி
(4) வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் பாரம்பரிய பயிர் ஏற்றமதி.
(5) வாகன மற்றும் மருந்து ஏற்றுமதி. (.........)

32. கதிர்காம பிரதேசத்திற்கு உரித்தான சுற்றுலா வகையினை சரியாகக் குறிப்பிடும விடை.
(1) சாகச சுற்றுலா (Adventure Tourism)
(2) ஆழகியல் சுற்றுலா (Aesthetic Tourism)
(3) பொழுதுபோக்கு சுற்றுலா (Recreational Tourism)
(4) வரலாற்று/சமய சார் சுற்றுலா (Historical/Religious Tourism))
(5) சூழல் சார் சுற்றுலா. (Eco- Tourism) (………)

33. அறுவடைக்கு பிந்திய தொழினுட்பத்துடன் (Post harvest technology) தொடர்பில்லாத விடை.
(1) பொதியிடலுக்கு தரமான கூடைகளைப் பயன்படுத்தல்.
(2) சிறப்பான போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தல்
(3) போக்குவரத்திற்கு குளிரூட்டப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துதல்
(4) முறையான களஞ்சிய வசதிகளை அமைத்தல்.
(5) போக்குவரத்தின் போது சேதமடையாத பயிர்களை அறிமுகப்படுத்தல். (………)

34. 90% இற்கும் மேற்பட்ட கார்பன் சதவீதத்தினை கொண்ட நிலக்கரி.
(1) அந்திரசைற் (3) பீட் (5) லிக்னைற்று
(2) பிற்றுமினஸ் (4)லிக்னைற்று (…..…..)
.
35. இடப்பெயர்வு (Migration) தொடர்பான பிழையான கூற்றாக கருதப்படுவது.
(1) இது உலக மொத்த சனத்தொகையை பாதிக்கிறது.
(2) இது சனத்தொகை வளர்ச்சியை பாதிக்கும் முதன்மை காரணியாகும்.
(3) இது நகராக்கத்தினை தீர்மானிக்கும் காரணியாகும்.
(4) இது இலங்கையின் சனத்தொகையின் இயக்கத்தன்மையினை தீர்மானிக்கிறது.
(5) இது தள்ளு விசை மற்றும் இழுவிசை காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது (..………)

36. ஆண்டியக் கிணறுகள் (Andiya wells), நீர் சக்கரங்கள் மற்றும் பல்வேறு பம்பிகளைப் பயன்படுத்தும் நீர்ப்பாசன முறையை சரியாகக் காட்டும் விடை.
(1) தெளிப்பு நீர்ப்பாசனம்
(2) புவியீர்ப்பு நீர்ப்பாசனம்
(3) மேற்பரப்பு நீர்ப்பாசனம்.
(4) ஏற்று நீர்ப்பாசனம்
(5) நுண் நீர்ப்பாசனம் (………)

37. உற்பத்திக் கைத்தொழிலின் அமைவிடக்காரணிகளில் ஜப்பானின் டேக்கியோ,நாகோயா மற்றும் கோபே பகுதிகளில் இரும்புருக்கு கைத்தொழில் சிறப்படைவதற்கான பிரதான அமைவிடக் காரணியாக அமைவது.
(1) மூலதனம் (2) தொழினுட்பம் (3) போக்குவரத்து (4) உழைப்பு (5) வலுச்சக்தி (………..)

38. உலக கைத்தொழில் துறையின் அளவு மற்றும் தரம் இரண்டையும் அதிகரிக்கச் செய்த முக்கிய காரணி
(1) வேலைவாய்ப்புக்களின் விரிவாக்கம்.
(2) உழைப்பில் பெண்களின் பங்கேற்பினை அதிகரிக்கச் செய்தல
(3) உற்பத்தி தொழில்களின் பன்முகத்தன்மை.
(4) பாரம்பரிய தொழில்களை பாதுகாத்தல்.
(5) உற்பத்தி செயற்பாட்டில் இயந்திரங்களை பயன்படுத்தல். (………)

39. சர்வதேச நாணய நிதியத்தினால் (IMF) அறிமுகப்படுத்தப்பட்ட உலகமயமாதலின் முக்கிய அம்சங்களை மாத்திரம் காட்டும் விடைத்தொகுதி.
(1) அறிவுப்பரவல், மூலதனம் மற்றும் முதலீடு, கல்வி
(2) கல்வி, வர்த்தகம் மற்றும் பரிமாற்றங்கள், இடப்பெயர்வுகள்
(3) வர்த்தகம் மற்றும் பரிமாற்றங்கள், மூலதனம் மற்றும் முதலீடு, அறிவுப் பரவல்,
(4) வர்த்தகம் மற்றும் பரிமாற்றங்கள், மூலதனம் மற்றும் முதலீடு, கல்வி
(5) கல்வி, இடப்பெயர்வு, அறிவுப்பரவல்.

40. சார்க் அமைப்பு அதிகார பூர்வமாக நிறுவப்பட்ட நகரம்.
(1) புதடில்லி (3) பீட் (5) கொழும்பு
(2) டாக்கா (4) கராச்சி (…..….)

❋❋❋❋

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026**
**General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026**

**புவியியல் I** | 22 | T | I

**அறிவுறுத்தல்கள்**

- **பகுதி II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- **பகுதி III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- இவ்வினாத்தாள்களுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1:50000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படம் மற்றும் உலகப் புறவுருவப் படம் என்பன வழங்கப்படும்.

**கவனத்தில் கொள்க.**

- வினாக்களுக்குரிய இலக்கம் மற்றும் உப பிரிவுகளுக்குரிய இலக்கங்களை விடைத்தாளில் தெளிவாக குறிப்பிடுதல் அவசியம்.
- இடவிளக்கப்பட்த்தில் விடைகளை எழுத வேண்டாம்.
- வழங்கப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தினை விடைத்தாளுடன் இணைக்கவேண்டாம்

## பகுதி II

**1.** இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50000 அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்கு தரப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள **பௌதீக அம்ச**த்தினை பெயரிடுக? (1 புள்ளி)

(ii) **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள **வடிகால் அம்சத்தினை** பெயரிடுக? (1 புள்ளி)

(iii) படப்பிரதேசத்தில் அவதானிக்கக்கூடிய இரு **எல்லைகளைப்** பெயரிடுக? (2 புள்ளிகள்)

(iv) படப்பிரதேத்திசத்தின் **C மற்றும் D** எழுத்துக்களினால் பெயரிப்பட்டுள்ள இரு அம்சங்களை பெயரிடுக.? (2 புள்ளிகள்)

(v) படப்பகுதியில் பரவலாக காணப்படும் **வர்த்தகப் பயிரினை** குறிப்பிடுக. (1 புள்ளி)

(vi) படப்பிரதேசத்தில் நெற்பயிர்ச்செய்கை பரம்பலில் செல்வாக்கு செலுத்தும் காரணியினைப் பெயரிடுக. (1 புள்ளி)

(vii) **சதுரம் - E** இனைப் இரு மடங்காகப் பெரிதாக்கி, அதனுள் காணப்படும் நதி மற்றும் வீதிகளை வரைந்து காட்டுக. (4 புள்ளிகள்)

(viii) பெரிதாக்கப்பட்ட சதுரத்தினுள் காணப்படும் **பிரதான வீதியின்** நீளத்தை கிலோ மீற்றரில் தருக. (2 புள்ளிகள்)

(ix) படப்பிரதேசத்தின் **தரைத்தோற்றத்தில்** செல்வாக்கு செலுத்தும் மூன்று காரணிகளை விளக்குக. (6 புள்ளிகள்)

**2.** தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்தி **பின்வருவனவற்றை** குறித்து பெயரிடுக?

- பாரசீக குடா
- வெனிசுவெலா
- யூரல் மலைத்தொடர்
- யாங்சிக்கியாங் நதி
- கடகக்கோடு.

- பிரேரியஸ் புல்வெளி
- அயர் ஏரி
- போபர்ட் கடல்
- ஆபிரிக்காவின் பாரியளவு பெற்றோலியத்தை உற்பத்தி செய்யும் நாடு.
- 2026 உலகப் பொருளாதார மாநாடு (WEF) நடைப்பெற்ற நகரம். (10 புள்ளிகள்)

## பகுதி III

**3.** i. படமொன்றில் உள்ளடங்கியுள்ள தகவல்களின் அடிப்படையில் பிரதான வகை **இரண்டினை** பெயரிடுக. (02 புள்ளிகள்)

ii. மேலே (i) இல் உம்மால் பெயரிடப்பட்ட ஒரு பட வகையின் **மூன்று** பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

iii. இரண்டாம் நிலை தரவு மூலமாக வரைபடங்களைப் பயன்படுத்தும் போது ஆய்வாளனொருவன் எதிர்நோக்கக்கூடிய **இரு** சவால்களை கலந்துடையாடுக. (04 புள்ளிகள்)

iv. "தித்வா" (Ditwa) சூறாவளியினால் இலங்கைக்கு ஏற்பட்ட சமூக தாக்கம் தொடர்பான ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளனொருவன் தரவுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய **மூன்று** நிறுவன மூலங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)

**4.** i. தொலையுணர்வு தொழினுட்பம் (Remote Sensing) என்பதனை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

ii. தொலையுணர்வு தொழினுட்பமானது பின்வரும் **மூன்று** சந்தர்ப்பங்களின் போது செயற்படும் விதத்தினை சுருக்கமாக விளக்குக.

a.கவர்தல்.(Capture)
b.இலக்கு (Target)
c. பகுப்பாய்வு (Analysis) (03 புள்ளிகள்)

iii. வான்வழி ஒளிப்படங்களின் **இரு** பண்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)

iv. இலங்கையின் சுற்றுலா பிரயாண கைத்தொழிலினை மேம்படுத்துவதற்கு நவீன படவரைகலையியல் நுட்பமுறைகளைப் பயன்படுத்தக்கூடிய **மூன்று** சந்தர்ப்பங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக (06 புள்ளிகள்)

**5.** 2021-2024 காலப்பகுதியில் பிராந்திய ரீதியாக இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பிரயாணிகளின் விபரங்கள் அட்டவணை- 1 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை-01**
**பிராந்திய ரீதியாக இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப்பிரயாணிகள்**
**(ஆயிரங்களில்) – 2021-2022**

| ஆண்டு | ஐரோப்பா | ஆசியா-பசுபிக் | மத்திய கிழக்கு | அமெரிக்கா |
|---|---|---|---|---|
| 2021 | 450 | 620 | 180 | 210 |
| 2022 | 780 | 920 | 260 | 300 |
| 2023 | 1050 | 1300 | 420 | 510 |
| 2024 | 1200 | 1500 | 500 | 600 |

**மூலம்:- இலங்கை சுற்றுலா அதிகார சபை, 2025**

i. அட்டவணை - 01 இல் தரப்பட்டுள்ள தரவுகளை பயன்படுத்தி **பல்பார் வரைபொன்றினை** அமைக்குக. (08 புள்ளிகள்)

ii. உம்மால் அமைக்கப்பட்ட வரைபின் அடிப்படையில், பிராந்திய ரீதியான சுற்றுலாப்பிரயாணிகளின் வருகையின் **நான்கு** பண்புகளை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii. உம்மால் அமைக்கப்பட்ட வரைபின் அடிப்படையில், பல்பார் வரைபின் **இரு** பயன்பாடுகளை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**6.** அட்டவணை- 2 இல் தரப்பட்டுள்ள தரவுகளை பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை-02**

**பெரும் போக நெல்லுற்பத்தி (மெற்றிக் தொன் ஆயிரங்களில்) 2016-2025**

| ஆண்டு | உற்பத்தி (மெ.தொ-ஆயிரம்) |
|---|---|
| 2016 | 2,903 |
| 2017 | 1,474 |
| 2018 | 2,397 |
| 2019 | 3,072 |
| 2020 | 3,197 |
| 2021 | 3,062 |
| 2022 | 1,931 |
| 2023 | 2,696 |
| 2024 | 2,722 |
| 2025 | 2,746 |

**மூலம்:- இலங்கை விவசாய திணைக்களம், 2025**

i. அட்டவணை-02 இல் தரப்பட்டுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, வருடாந்த பெரும் போக நெல்லுற்பத்தி தொடர்பான பினவருவனவற்றை **கணிக்குக.**

a.இடை

b.விலகல்

c.இடைவிலகல்

$MD = \sum \frac{|x-\bar{x}|}{n}$ சூத்திரத்தினை பயன்படுத்துக. (05 புள்ளிகள்)

ii. மேலே (i) இல் உள்ள தரவினை பயன்படுத்தி **விலகல் வரைபட**மொன்றினை அமைக்குக. (06 புள்ளிகள்)

iii. உம்மால் அமைக்கப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில், இலங்கையின் வருடாந்த மகா போக நெல்லுற்பத்தி தொடர்பாக **நான்கு** பண்புகளை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

❋❋❋❋

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

**புவியியல் II** | 22 | T | II

**மூன்று மணித்தியாலம்** | **மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

**அறிவுறுத்தல்**


❋ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

## பகுதி II பௌதீக புவியியல்

1.
(i). பௌதிக தொகுதியொன்றின் **இரு** முக்கிய பண்புகளை பெயரிடுக. (02 புள்ளிகள்)
(ii). புவியோட்டின் **மூன்று** முக்கிய பண்புகளைச் சுருக்கமாக விளக்குக (06 புள்ளிகள்)
(iii). பின்வரும் உபதொகுதிகளுடன் தொடர்புடைய **மூன்று** இயற்கை செயன்முறைகளை விவரிக்குக.
(அ) நீர்க்கோளம் (ஆ) வளிக்கோளம் (இ) உயிர்க்கோளம் (06 புள்ளிகள்)
(iv). சூழல் சமநிலையை சீர்குலைக்கும் **மூன்று** பௌதீக மற்றும் மானிட செயற்பாடுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

2.
(i). பனிக்கட்டியாற்று பிரதேசங்களில் இடம்பெறும் **இரு** அரித்தல் செயன்முறைகளை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ii). மலைப்பனிக்கட்டியாற்று பிரதேசங்களில் உருவாகும் **மூன்று** அரித்தல் நிலவுருவங்களை வரைபடத்தின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)
(iii). கண்ட பனிக்கட்டியாற்றுடன் தொடர்புடைய **மூன்று** படிதல் நிலவுருவங்களை வரைபடத்தின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)
(iv). அண்மை காலமாக பனிக்கட்டியாற்று பிரதேசங்கள் முகங்கொடுக்கும் **மூன்று** பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

**3.**
(i). புவியின் மேற்பரப்பு நீர்ப்பரம்பல் தொடர்பான பின்வரும் வரைபடத்தில் **A** மற்றும் **B** இனை பெயரிடுக. (02 புள்ளிகள்)
(ii). நீர் ஒரு வளமாக மாறுவதில் தாக்கம் செலுத்தும் **மூன்று** காரணிகளை உதாரணங்களின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)
(iii). சமுத்திர நீரினை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் **மூன்று** பொருளாதார நடவடிக்கைகளை விளக்குக. (06 புள்ளிகள்)
(iv). நீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக உலக நாடுகள் மேற்கொள்ளக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (06 புள்ளிகள்)




**4.**
(i). **இரு** வெப்ப பாலைவனங்களையும், **இரு** குளிர் பாலைவனங்களையும் பெயரிடுக. (02 புள்ளிகள்)
(ii). பாலைவன உயிர் திணிவு தொடர்பாக பின்வரும் தலைப்புகளின் கீழ் விளக்குக. (06 புள்ளிகள்)
(அ) பரம்பல் (ஆ) காலநிலை (இ) தாவர பரம்பல்
(iii) தற்போது பாலைவனமாதல் அதிகரித்து செல்வதில் செல்வாக்கு செலுத்தும் **மூன்று** மானிட காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)
(iv). அண்மை காலமாக இலங்கையில் ஏற்பட்டு வரும் வெள்ளப்பெருக்குகளினால் சூழல் தொகுதிகள் எதிர்நோக்கி வரும் **மூன்று** பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II – மானிடப் புவியியல்

**5.**

(i). வறுமையின் பலதரபட்ட **இரு** பண்புகளை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii). உலகளாவிய வறுமையை பாதிக்கும் **மூன்று** காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii). ஒரு நாட்டின் உணவு பாதுகாப்பு தங்கியுள்ள **மூன்று** காரணிகளை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iv). இலங்கையில் உணவு பாதுகாப்பினை பேணுவதற்காக மேற்கொள்ளக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

**6.**

(i). பெற்றோலியம் சார்ந்த **இரு** உப உற்பத்தி பொருட்களை பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii). கீழே தரப்பட்டுள்ள அட்டவணைக்கு அமைவாக உலக பெற்றோலிய உற்பத்தியில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் **மூன்றினை** பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

**பெற்றோலிய உற்பத்தி - நாளொன்றுக்கு பீப்பா (மில்லியனில்)**

| வலயம் | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|---|---|
| ஆபிரிக்கா | 7.2 | 7.2 | 7.0 | 7.1 | 7.2 | 7.4 |
| லத்தீன் அமெரிக்கா | 5.9 | 6.0 | 6.4 | 7.0 | 7.4 | 7.7 |
| வட அமெரிக்கா | 24.2 | 24.3 | 25.8 | 27.6 | 28.3 | 28.9 |
| சீனா | 3.9 | 4.0 | 4.1 | 4.2 | 4.3 | 4.4 |
| ஆசியா | 3.4 | 3.3 | 3.2 | 3.1 | 3.1 | 3.0 |
| ஐரோப்பா | 3.5 | 3.3 | 3.2 | 3.3 | 3.3 | 3.4 |
| மத்திய கிழக்கு | 27.7 | 28.2 | 30.9 | 30.7 | 30.2 | 30.6 |
| **மொத்த உற்பத்தி** | **75.8** | **76.3** | **80.6** | **83.0** | **83.8** | **85.4** |

**மூலம்:- Annual Statistic Bulletin (World Crude Oil production Data),2026**

(iii). உலக பெற்றோலிய உற்பத்தியுடன் தொடர்புடைய **மூன்று** பிரச்சினைகளை உதாரணங்களின் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)

(iv). இலங்கையில் பெற்றோலிய நுகர்வுடன் தொடர்புடைய பிரச்சினைகளை குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளை கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)

**7.**

(i). மரபணு தொழினுட்பம் என்றால் என்ன என்பதை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

(ii). உணவுற்பத்தியின் போது மரபணு தொழினுட்பத்தினை பயன்படுத்துவதன் **மூன்று** நன்மைகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii). தற்காலத்தில் சேதன விவசாயத்திற்கான முக்கியத்துவம் அதிகரித்தமைக்கான **மூன்று** காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv). இலங்கையில் நெல்லை சந்தைபடுத்துவதில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தீரப்பதற்கான **மூன்று** நடவடிக்கைகளை கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)


**8.**

(i). பிராந்திய அமைப்புகள் என்பதனை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

(ii). சார்க் அமைப்பின் நோக்கங்கள் மற்றும் பணிகள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iii). தற்போது சார்க் அமைப்பு எதிர்நோக்கி வரும் **மூன்று** சவால்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv). அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அனர்த்த முகாமைத்துவத்தில் சர்வதேச அமைப்புக்களின் பங்களிப்பு தொடர்பாக **மூன்று** காரணிகளினூடாக விளக்குக. (06 புள்ளிகள்)



N
A
B
C
D
E
Pinhawala
Waga West
Waga East
Pitumpe
Angampitiya
Arukwatta North
Arukwatta South
Weragala
Angamuwa
Pahala Bope
Ihala Bope
Udagama
Thummodara
Labugama Reservoir


1:50,000

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

வினா இலக்கம் - 2

புவியியல் I

22 | I

